REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 31உ வெள்ளி (16—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 1உ சனி (17—9—55) [இதழ் 81

'சர்க்காருக்கு நிதிப் பொறுப்பு வேண்டும்'

பொதுக் கணக்குக் குழு அறிக்கை

"சர்க்கார் மேற்கொள்ளுகிற அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பணம் செலவிடும் பொறுப்பேற்கும் நிர்வாக அதிகாரிகள் நிதிப் பொறுப்புணர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டுவது அவசியமான—கட்டாயமான ஒன்ருகும்," என்று பொதுக் கணக்குக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

"மக்கள் சபை ஒரு ஆண்டிற்கு அனுமதித்திருப்பதற்குமேல் மந்திரிகள் ஒரு அணுகூட அதிகம் செலவிடக் கூடாது; ஏனெனில் அது அரசியல் சட்டத்திற்கு முரணானதாகும்," என்றும் குழு ஞாபகப்படுத்தியிருக்கிறது.

சென்னை மந்திரியின் வேண்டாத அச்சம்!

மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைவது புதிய சிக்கல்களை உருவாக்குமாம்!

சுப்பிரமணியத்தின் கூற்று

திருநெல்வேலி, செப். 15—

"சென்னையை எதிர் நோக்கியுள்ள சிக்கல்களில் மாநிலத்தை மொழி அடிப்படையில் திருத்தி அமைப்பதும் ஒன்ருகும்;

"மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள், இந்தத் திங்கள் இறுதியில் வெளிவந்து விடக்கூடும்; பின்னரே அவை பற்றி சர்க்கார் முடிவு எடுக்கும்;

"இந்தச் சிக்கலில் சர்க்காரின் இறுதி முடிவு என்னவாயிருக்கும் என்பது எனக்குத் தெரியாது; ஆனல், மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பது என்று முடிவாகுமானல், பல புதிய சிக்கல்கள் உருவாகும்; சென்னையிலிருந்து மலபார் பிரிந்துவிடும்; திரு-கொச்சியில் உள்ள தமிழ் மாவட்டங்கள் சென்னையுடன் இணையும்; அதைத் தொடர்ந்து, மாவட்டங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டி வரும்;

"ஆனுலும், நாம் இந்தச் சிக்கல்களைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் மக்களின் நலனுக்காகப் பாடுபட வேண்டும்,"

என்று, சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம், திருநெல்வேலி மாவட்டக் கழகத்தினர், தனக்குத்தந்த வரவேற்பு ஒன்றுக்குப் பதிலளிக்கையில், குறிப்பிட்டிருக்கிருர்.

புல்கானினுக்கு 'உடல் நலமின்மை?'

மாஸ்கோ, செப். 15—

ஜெர்மன் அதிபர் அடிஞரை வழியனுப்புவதற்கு நேற்று விமான நிலையத்திற்கு வந்திருந்தபோது உடல் நலத்துடனிருந்த ரஷ்யப் பிரதமர் புல்கானின், இன்று உடல் நலமின்றி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது; ஆனல், உத்தியோக முறையில் எவ்விதத் தகவலும் இல்லையாம்!

நாகர்கள் வேட்டையாடப்படுகின்றனர்!

ஷில்லாங், செப். 15—

இலட்சிய ஈடேற்றத்திற்காக நாகர்களில் தீவிரவாதிகளாயிருப்போர், வடகிழக்கு எல்லை ஏஜென்சி வட்டத்தில் இரு கிராமங்களில் அலர்கள் அமைத்திருந்த 'கோட்டை'களை, இந்திய இராணுவத்தினரும் அசாம் போலீசாரும் கூட்டாகச் சேர்ந்து ஒழித்துவிட்டனர் என்று கூறப்பட்டுள்ளது.

மத சம்பிரதாயத்திற்கு தாயும்—சேயும் பலி!

காசி, செப். 13—

மத சம்பிரதாயப்படி ஒரு விரதத்தைப் பூர்த்தி செய்வதற்காக காசி எல்லையில் உள்ள அஜம்கார் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண், தனது ஒரே 18 மாதக் குழந்தையை இங்குள்ள சரசு நதியில் நீராட்ட எடுத்து வந்தார்.

நதியில் நீராட்டுகையில், குழந்தையை, வேகமான நீரோட்டம் இழுத்துச் சென்றுவிட்டது. குழந்தையைப் பறிகொடுத்த அந்தப் பெண், துக்கம் தாளாமல், நீர்ப் பெருக்கில் தானும் மூழ்கிவிட்டதாக செய்தி ஒன்று கூறுகிறது.

நன்மையா - தீமையா?

"படக் காட்சிகளைக் காணுவது, சிறிய எழுத்துக்களை வாசிப்பது, தையல் வேலை செய்வது—இவை போன்றவை, கண்களுக்குக் கெடுதலானவையா?"—என்பது பிரச்சினை!

"சரியான முறையில் இவைகளை மேற்கொள்ளுவதானல், இவை, கண்களுக்குக் கெடுதல் அல்ல; அன்றியும், கண் கோளாறுகளைப் போக்கவும் அவை நல்ல பயிற்சிக்குரியதாகும்,"

என்று, மேற்கத்திய ஆயுர்வேத, இயற்கை வைத்திய முறைகளில் நிபுணரான டாக்டர் ஆர். எஸ். அகர்வால் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டியப் பயிற்சி, குழந்தைகளின் கண்களுக்கும், மனதிற்கும் ஓய்வு அளிக்கக்கூடும்" என்றும் கூறியுள்ளார்

வட நாட்டில் வெள்ளத் தடுப்பு

ரூ. 117 கோடியில் திட்டம்

புதுடில்லி, செப். 15—

வெள்ளத் தடுப்புக்காக சுமார் ரூ. 117 கோடி பெறுமான திட்டங்களை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென மத்திய சர்க்கார் நீர்ப்பாசன மின்சார இலாகா தயாரித்திருப்பதாகத் தெரிகிறது.

திறந்தவெளி சிறைக்கூடம்!

அனந்தப்பூர், செப். 15—

"உத்திர பிரதேசத்தில் இருப்பதைப் போன்ற 'திறந்த வெளி சிறைக்கூடம்' ஒன்று சீக்கிரமே அனந்தப்பூரில் அமையும்,"

என்று, ஆந்திர மாநில சிறை இலாகா அதிபர் தெரிவித்திருக்கிருர்.

ரூ. 13 இலட்சம் குடிக்கூலி நிலுவை

இந்திய சர்க்கார் வசூலிக்காது விட்டுள்ளது

புதுடில்லி, செப். 15—

"கடந்த 1954 அக்டோபர் முதல் தேதியன்று இந்திய சர்க்காருக்கு கிடைக்கவேண்டிய குடிக்கூலி பாக்கி சுமார் ரூ 13 இலட்சத்திற்கும் அதிகம்,"

என்று, பொதுக் கணக்குக் குழு அறிவிக்கிறது.

"சர்க்கார் கட்டிடங்களில் குடியிருக்கும் சர்க்கார் ஊழியர்களிடமிருந்து ரூ. 9 இலட்சத்திற்கு மேல் வாடகை வசூல் செய்யப்படாமலிருக்கிறது; இந்திய சர்க்கார் மந்திரி சபை அலுவலகங்கள் பல ரூ. 1,90,000 வரைவாடகை பாக்கி தரவேண்டியுள்ளது,"

என்றும் குழு தெரிவித்திருப்பதுடன், 'இந்த நிலுவை சரிக்கட்டப்படுவதற்கு சில தனி வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்,' என்றும் யோசனை தெரிவித்திருக்கிறது.

'காஷ்மீரை விட்டு வெளியேறுக!'

கராச்சி இந்தியத் தூதுவர் அலுவலகத்தின்முன் சத்தியாக்கிரகம்

கராச்சி, செப். 15—

இங்குள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தின் முன், கடந்த ஐந்து நாட்களாகத் தொடர்ந்தாற்போல் 'காஷ்மீர் விடுதலை செய்யப்பட வேண்டும்,' என்று கோரி, அமைதியான 'சத்தியாக்கிரகம்' நடைபெறுவதாகத் தெரிகிறது.

கடந்த ஞாயிறன்று இது துவங்கிற்று; ஒரு மாணவர், இந்தியத் தூதுவர் அலுவலகத்தின் முன் வந்து, அலுவலக வாயிற்படியில் நின்றுகொண்டார்; அவர், குரல் ஏதும் எழுப்பவில்லை; மாருக, 20 அடி உயரமுள்ள கம்பு ஒன்றில் பாகிஸ்தான் கொடியைப் பறக்க விட்டிருந்தார்.

'காஷ்மீரிலிருந்து, இந்தியா வெளியேற வேண்டும்; காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்,' என்று எழுதப்பட்ட அட்டை ஒன்றையும் அவர் வைத்துக்கொண்டிருந்தார்.

திங்களன்று மாலையில் வேறு இருவர் அந்த மாணவருக்குப் பதிலாக 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபட்டனர்; பின்பு, நேற்று, அவர்களுக்குப் பதிலாக வேறு இரு தொழிலாளர்கள் அவர்களிடத்தில் நின்றுகொண்டு, 'போராட்டத்தில்' ஈடுபட்டிருக்கின்றனர்.

மத்திய காஷ்மீர் முன்னணிக் குழுவின் கராச்சிக் கிளை இந்தப் போராட்டத்தைத் துவக்கியிருப்பதாகவும், காஷ்மீர் விடுவிக்கப்படுகிற வகையில் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்திய சர்க்காரின் தவருன போக்கு!

புதுடில்லி, செப். 15—

"தாங்களாகவே முன்வந்து கணக்குகளைக் காட்டுவது என்ற அடிப்படையில் வரி கொடாது ஏய்ப்பவர்களுடன் சர்க்கார் செய்துகொண்ட ஒப்பந்தம், நிர்வாகத் துறை ரீதியாக ஆபத்தான முன் மாதிரிகளை விளைவிக்கும் என்பதால், சரியான நடவடிக்கை அல்ல,"

என்று, பொதுக் கணக்குக் குழு தெரிவித்திருக்கிறது.

"இந்த ஒப்பந்தப்படி, விதிக்கப்பட்ட வரியில் 15 சதவிகித அளவே வசூலிக்க முடிந்தது," என்றும் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—28/55

பிரிவினை வாரத்தில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானம்

"பிரிந்துபோகும் தனி உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம் (துளுவம் உள்பட)—கேரளம் ஆகிய பகுதிகள் மொழிவழியும், தேவையான மாநில உரிமைகள் வழியும் தனித்தனிப் பிரிந்து, வெளிநாட்டு—வட நாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு அரசியல் ஆதிக்கத் தடுப்பு, வட நாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, வாணிபம், போக்குவரத்துப் பற்றுக் கோடுகள், தபால்-தந்தி, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி, இன்னபிற வழிகளில் குறைந்த அளவுத் திட்டத்தில், ஒன்றுபட்ட சுதந்திரச் சமதர்மத் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை அடைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக."

மேற்கண்ட தீர்மானத்தைப் பிரிவினை வாரக் கொண்டாட்டக் கூட்டங்களில் கழகத் தோழர்கள் நிறைவேற்றுவார்களாக!

அறிவகம்', சென்னை-13
16—9—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வரி கொடா இயக்கம் ஆரம்பமாகிறது?

பெல்காம், செப். 15—

செப். 16-ந் தேதியன்று ஆரம்பமாகும் 'தொக்கோல் தினத்'தன்று, கோவா முழுமையிலும் 'வரி கொடா இயக்கம்' ஆரம்பமாகுமாம்; இதற்கான ஏற்பாடுகள் யாவும் முடிவடைந்துவிட்டதாம்.

விரைவில் ஆரம்பம்?

புதுடில்லி, செப். 15—

இந்தியாவுக்கும்—அந்தமானுக்குமிடையே கூடியவிரைவில், வாரத்திற்கு ஒருமுறை கப்பல் போக்குவரத்து ஆரம்பமாகுமாம்.

இதற்காக ரூ. 30-இலட்சம் செலவில், ஒரு பழைய கப்பலை சர்க்கார் வாங்குமாம்.

இரண்டாண்டுகளுக்குப்பின் புதிய வரி விதிப்பாம்!

அப்போது மக்களின் வருமானம் அதிகரிக்குமாம்!

இந்திய சர்க்கார் நிதி மந்திரி தேஷ்முக் தகவல்

"இன்னும் ஒன்று அல்லது இரண்டாண்டுகளுக்கு, மக்களின் வரிச்சுமை அதிகரிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏதுமில்லை,"

என்று இந்திய சர்க்கார் நிதி மந்திரி தேஷ்முக், மக்கள் சபைக் காங்கிரஸ் கட்சியின் நிரந்தரக் குழுவினரிடம் தெரிவித்திருக்கிருர்.

"திட்டத்தின் முதல், இரண்டாம் ஆண்டு முடிவின்போது, மக்களின் வருமானம் அதிகரிக்கும்; அப்போது, புதிய வரிகள் விதிப்பது சாத்தியமாயிருக்கலாம்,"

என்றும் அவர் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 16—9—'55 வெள்ளி

பிறந்த பொன்னுள்!

செப்டம்பர் பதினேழு!

குறுகிய எதிர்காலத்தில் எழுதப்படவிருக்கும் திராவிடத்தின் விடுதலை வரலாற்றில் 'திரும்புமுனை' என்ற பெயருடன் துவங்கும் விறுவிறுப்பான அத்தியாயத்தின் நிகழ்ச்சித் தொடர் தோன்றிய நாள், தி. மு. கழகம் பிறந்த பொன்னுள்!

கழகம் பிறந்து இன்றுடன் ஆறு ஆண்டுகள் முடிகின்றன; ஏழாம் ஆண்டு நாளைமுதல் துவங்குகிறது.

அழுதுகொண்டே பிறக்கும் குழந்தையைப்போல, கழகமும், கண்ணீருடன் பிறந்தது!

குழந்தையின் வளர்ச்சியில், தனது எதிர்காலத்தைக் கணக்கிடும் தாய்போல, திராவிடமும், தி. மு. கழகத்தின் வளர்ச்சியில்தான் தனது எதிர்கால நல்வாழ்வு இருப்பதாக நம்பிக்கிடக்கிறது.

பிறந்த குழந்தையின் வளர்ச்சியில் தாய் காட்டும் அக்கறைக்குச் சற்றும் குன்றியதல்ல — கழகத்தின் வளர்ச்சிக்கு திராவிடர் காட்டியுள்ள அக்கறையும், ஆதரவும்!

குழந்தையின் நடவடிக்கைகள் தாயை மகிழ்விக்கத் தவறுவதில்லை; அதேபோல, கழகத்தின் நடவடிக்கைகள் தாயகத்தை மகிழ்விக்க மறந்ததில்லை!

'பிள்ளை பிறந்து ஆறுண்டுகள் ஆகிவிட்டன; ஏழாம் ஆண்டு, நாளை துவங்குகிறது; என் செல்வம் வளர்ந்து பெரியவனுகிவிட்டால்......!'—என்று பெற்ற தாய் எண்ணிக்கிடப்பதைப்போலத்தான், 'தி. மு. கழகம் பிறந்து ஆறுண்டுகள் ஆகிவிட்டன; கழகம் இன்னும் ஓங்கி வளர்ந்துவிட்டால் எத்தனை நாளாகும்—நாம் விடுதலை பெற,' என்று எண்ணிக்கிடக்கிறது, தாயகம்—திராவிடம்!

ஆறு வயதுக் குழந்தை—பிறந்தது முதல் தன் பொன்மேனியால், பொக்கை வாய்ச் சிரிப்பால், தவழுதலால்—தத்தி நடத்தலால் — மழலையால் பெற்ற தாயை மகிழ்விப்பது போலத்தான், கழகமும் தாயகத்தை மகிழ்வித்திருக்கிறது.

ஆறுண்டுகளில் கழகம் சாதித்துள்ளவைகளை நல்ல கண் கொண்டோர் அனைவரும் காணக் கூடியவை — நாமே நினைத்துப் பெருமைப்படக் கூடியவை—என்றால், அது சம்பிரதாயத்திற்காகச் சொல்லப்படுவதாகாது.

ஆயிரத்து முன்னூற்றுக்கும் அதிகமான கிளைகள்; இலட்சத்து ஐம்பதினயிரத்திற்கும் அதிகமான இலட்சிய வீரர்கள்; கழகத்திற்கென மாளிகை—'அறிவகம்'; இதழ்—'நம நாடு'; திறந்த வெளி—நுங்கம்பாக்கம்; கழகம் பெற்றுள்ள வளர்ச்சியைக் காட்ட இவை மட்டுமல்ல—இன்னும் எத்தனையோ உண்டு!

கழகத்தின் வளர்ச்சிக்கொப்ப அதன் ஆற்றல், ஆண்டுக்கு ஆண்டு இயற்கையாகவே வளர்ந்து வருவது கண்கூடு.

ஆறு ஆண்டுகளில், கழகம் சாதித்துள்ளவற்றை நாடறியும்-நாம், கூறத் தேவையில்லை. இடைவிடாது மக்கட்பணி ஆற்றியிருக்கிறேம்; பல்லாயிரக்கணக்கான பகுத்தறிவுப்பிரசாரக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறேம்; இலட்சிய விளக்க நாடகங்கள் நடத்தியிருக்கிறேம்; மாநிலமெங்குமுள்ள அத்தனை மாவட்டங்கள்தோறும் இரு மாநாடுகள் நடத்தியிருக்கிறேம்; ஒரு இணையற்ற மாநில மாநாடு கண்டிருக்கிறேம்; ஆக்க வேலைகள் பல மேற்கொண்டு அரும்பணி புரிந்துள்ளோம்; போராட்டங்கள் நடத்தி—'நாம் யார்; நாம் ஏன் தோன்றினேம்'—என்பதை, உலகறியச் செய்திருக்கிறேம்.

இத்தனையையும் நாம் கடமை உணர்வோடு, கண்ணியம் வழுவாது, கட்டுப்பாடுடன் செய்திருக்கிறேம்.

வீழ்ந்துபட்ட திராவிடத்தின் விடுதலைக்கு எழுச்சி முரசு தட்டி, போர்ச் சங்கம் ஊதி, களம் புகுந்துள்ள வீரர் பட்டாளமாக தி. மு. கழகம் விளங்குகிறது.

கழகம் புகுந்துள்ள போர்க்களத்தில், அது சந்தித்திருக்கிற எதிர்ப்புகள், தாங்கிக்கொண்டிருக்கிற தாக்குதல்கள், சகித்துக்கொண்டிருக்கிற கொடுமைகள், புரிந்திருக்கிற தியாகங்கள் மகத்தானவை; என்றாலும், நாளுக்கு நாள் கழகத்தின் வளர்ச்சியில் வலிவும் பொலிவும் மேலோங்கி வருகின்றன என்பது நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது.

ஆறுண்டுக் காலத்தில், கழகம், தாயகத்தின் விடுதலைக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல பல பலன்களையும், வெற்றிகளையும் பெற்று வந்திருக்கிறது.

தாயகத்தின் விடுதலையைத் தட்டிப் பறித்து வைத்திருக்கும் வடநாட்டவர், நமது தாயகத்திலேயே அவர்களுக்குக் கிடைத்திருக்கும் எடுபிடிகளை — ஏவலாட்களைக் கொண்டே, தங்கள் ஆதிக்கத்தை எதிர்ப்பவரை அடக்கிவிட்டு, என்றென்றைக்கும் நம்மை அவர்களின் 'ஆதிக்கப் பிடி'யிலேயே வைத்திருக்க எண்ணியிருந்தனர்.

நாம் போர்க்களம் புகுந்த நாட்களில், எதிரிகள் நம்மைச் சந்தித்ததில்லை; அவர்களின் ஏவலாட்கள் நம்மைச் சந்திக்க வந்தனர்; அந்த ஏவலாட்கள், விடுதலை உணர்வால் எழுந்த—தீரம் மிகுந்த—வீரம் செறிந்த போர்ப் படையான நமது கழகத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாமற் போய்விட்டது கண்டு, இன்று, தாங்களே களைப்புக முற்பட்டிருக்கின்றனர்.

ஆறுண்டுக் காலத்தில், கழகம் பெற்றுள்ள எத்தனையோ வெற்றிகளுக்குச் சிகரமாக நாம் யாரைப் போர்க்களத்தில் சந்திக்க விரும்பினேமோ, யாரிடமிருந்து விடுதலையைக் கேட்கிறேமோ அந்த நமது வைரிகள்—ஆதிக்கபுரியினர் — வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தூண்கள், இன்று நம்மை எதிர்க்க, சில நேரத்தில் 'உபதேச வாளு'ம், சில நேரத்தில் 'நயவஞ்சக வாளு'ம் ஏந்த முற்பட்டிருப்பது, அமைந்துள்ளது!

திராவிடத்தைப் போலவே, அடிமைத் தளையை அறுத்து விடுதலை பெறத் துடிக்கும் நாடுகள், உலகத்தில் பலப்பல; அவை எல்லாம் தங்கள் விடுதலையைப் பெற பெரும் புரட்சித் தீயை மூட்டி, அதில் ஆதிபத்தியக்காரர்களை வெட்டி வீழ்த்தி, கருக்கிச் சாம்பலாக்க முற்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் கண்முன்பு கண்டு கொண்டிருக்கிறேம்,

நமது இலட்சியத்தை ஈடேற்றிக்கொள்ள ஜனநாயக வழிகளை மேற்கொண்டிருக்கிற நாம், உலகத்தில் நடைபெற்ற—நடைபெறும் விடுதலைப் போராட்டங்களிலிருந்து பாடங்களைப் பெற்றுக்கொள்வது மட்டுமின்றி, பிறருக்கு நல்ல பாடங்களைக் கற்றுத் தருபவர்களாகவும் விளங்கி வருகிறேம்.

ஏழாம் ஆண்டில் கழகத்தின் எதிர்கால வேலைத் திட்டங்களையும், நடைமுறைகளையும், விடுதலைக்கான போராட்டங்களையும் வகுப்பதற்காக, இரண்டாவது மாநில மாநாடு கூடவிருக்கிறது—திருச்சியில்!

கடந்த ஆறுண்டு காலத்தில் கழகம் பெற்றுள்ள வளர்ச்சியும், வெற்றியும், எதிர்காலத்தை நம்பிக்கையுடையதாக்கியிருக்கின்றன.

எதிரிகள், களம் புகுந்துவிட்டனர்; நம்மை அழித்துவிட மனப்பால் குடிக்கின்றனர்.

அந்த எதிரிகளைவீழ்த்தி, தாயகத்தை விடுவிக்கத் தயாராக இருக்கும் கழகம், நாளை, ஏழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கழகம் தாண்டும் ஒவ்வொரு ஆண்டும், நாட்டிற்குப் புது நம்பிக்கை ஊட்ட வல்லதாகும்.

'வளரும் ஆண்டுகள், நாட்டவரிடையே எழுந்துள்ள விடுதலை ஆர்வத்தை மேலும் கொழுந்துவிட்டெரியத் தூண்டும் கோல்களாக அமையட்டும்; அந்த ஆர்வத் தீயிலே ஆணவம் கொண்ட ஆதிபத்தியக்காரர்கள் அழிந்துபடட்டும்; விடுதலை மலர்ந்து மணம் தரட்டும்'—என்ற திராவிடரின் நம்பிக்கை, குறுகிய எதிர்காலத்தில் வெற்றி பெறத்தான் போகிறது; கழகம், அந்த வெற்றியை நாட்டவருக்குப் பெற்றுத் தரத்தான் போகிறது.

வாழ்க திராவிடம்—வளர்க நமது கழகம்—வெல்க நமது இலட்சியம்—என்ற குரல், திராவிடமெங்கணும் ஒலிக்கட்டும், இந்த செப்டம்பர் பதினேழாம் நாளன்று!

'இராம தூதுவர்'கள் ஏற்றுமதி

கட்டுப்பாடு விதிகளுக்கு திருத்தம்

புதுடில்லி, செப். 13—

மருத்துவ ஆராய்ச்சிக்காகவும், மருந்துகள் தயாரிப்பதற்காகவும் குரங்குகளை ஏற்றுமதி செய்வது சம்பந்தமான கட்டுப்பாடு உத்திரவின் நடைமுறை விதிகளை இந்திய சர்க்கார் திருத்தியுள்ளனர்.

குரங்குகள் ஜீவகாருண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டுமென்பதும், குறிப்பிட்ட காரியங்களுக்காக மட்டுமே அவைகள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்பதும் நிபந்தனைகளில் ஒன்றாகும்.

பர்மாவில் உள்ள மார்வாரிகள்மீது இறக்குமதி விதிகளை மீறியதாக நடவடிக்கை

இரங்கூன், செப். 14—

இறக்குமதி ஒழுங்குமுறை விதிகளை மீறிய குற்றத்திற்காக பர்மாவில் உள்ள சில மார்வாரி வர்த்தகர்கள்மீது பர்மிய சர்க்கார், நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதனை ஒட்டி, மார்வாரி வர்த்தக சங்கத் தூதுக் குழு ஒன்று, பர்மியப் பிரதமர் யூ-நூ-வைச் சந்தித்திருக்கிறது.

பர்மிய வர்த்தக அபிவிருத்தி மந்திரியும், இந்தியத் தூதுவரும், அந்தப் பேட்டியின்போது உடனிருந்தனர் என்று தெரிகிறது.

சமூகத்திலுள்ள தீய பழக்கங்கள்

ஜைன சாதுக்கள் எதிர்ப்பர்—தீவிர இயக்கம் நடத்துவர்?

அம்பாலா, செப். 14—

"சமூகத்தில் நிலவும் தீய பழக்கங்களை எதிர்த்து, ஜைன சாதுக்கள் தீவிர இயக்கம் நடத்தவேண்டும்,"

என்று, மாலர் கொத்லாவில் நடைபெற்ற ஜைன மகா சபையின் 18-வது ஆண்டுகூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்றியும், பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஜைனக் கோவில்களில் ஜாதி பேதமின்றி எல்லோரையும் அனுமதிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

துன்புறும் மக்களுக்குப் பெரும் உதவி

செஞ்சிலுவைச் சங்கங்களின் நிவாரணப் பொருள்கள்

அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கம், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வெள்ளத்தால் துன்பப் படுவோருக்கு உதவியாக 1,00,000 டாலர் பெறுமானமுள்ள பொருள்களை அனுப்புகிறது. இதில் இந்தியாவுக்கு அனுப்புவது 50,000 டாலர் பெறும். சிலவாரங்களுக்கு முன், இவ்விரு நாடுகளுக்கும் இச் சங்கம் 10,000 டாலர் பெறுமான முன்ன நிவாரண உதவி அனுப்பியது.

உதவிப் பொருள்களை எடுத்து வர அமெரிக்க விமானப் படை, விமானங்கள் கொடுத்து உதவியது.

இதுவரை இந்தியாவுக்கு இந்த வெள்ள நிவாரணத்துக்கு 25 நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கங்கள் உதவி செய்துள்ளன. இவற்றுள் அமெரிக்க நாட்டுச் சங்கமும் ஒன்று. பாகிஸ்தானுக்கு உதவியிருப்பவை 16 நாட்டுச் சங்கங்களாகும்.

பத்திரிகைக் குழுவின் சிபாரிசுகள்

மந்திரி கேஸ்கர் அறிவிப்பு

புதுடில்லி, செப். 14—

பத்திரிகைக் குழு சிபாரிசு செய்துள்ள பத்திரிகைகளின் விலை, பக்கங்கள் கட்டுப்பாடு கொள்கை ஆகியவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அதனைப் பரீட்சித்துப் பார்க்கப் போவதாகவும், பத்திரிகைக் 'கவுன்சில்' அமைக்கப்படுமென்றும், ராஜ்யங்கள் சபையில் அமைச்சர் கேஸ்கர் அறிவித்துள்ளார்.

பத்திரிகைகளின் வேலை நிலை சம்பந்தமான மசோதா ஒன்று அடுத்த 8 அல்லது 10 நாட்களில் மக்கள் சபையில் கொண்டுவரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

சென்னை சட்ட சபை சபாநாயகர் தேர்தல்

செப்டம்பர் 27-ந் தேதியன்று, சென்னை சட்ட சபை சபாநாயகர் பதவிக்குத் தேர்தல் நடைபெற வேண்டுமென்று கவர்னர் உத்திரவிட்டுள்ளார்.

நாள்தோறும் ரூ. 9,000 நஷ்ட ஈடு!

தெற்கு வட்டார இரயில்வே தருகிறதாம்!

சென்னை, செப். 12—

தெற்கு வட்டார இரயில்வே, நாள் ஒன்றுக்கு ரூ. 9,000 வீதம் நஷ்டஈடு தந்து வருகிறதாம்.

இரயில் மூலம் அனுப்பப்படுகிற சாமான்கள் முழுவதுமாக அல்லது பகுதி காணமற் போய்விடுவது, திருடு போய்விடுவது, தீப்பற்றுதல், வீழ்ந்தடுதல் இவற்றினுல் சேதமாவது முதலியனவற்றிற்காக இந்த நஷ்டஈடு தரப்படுகிறதாம்.

1954—55-ம் ஆண்டில் மட்டும் ரூ. 32,60,000 நஷ்டஈடாக இந்த இரயில்வேயால் தரப்பட்டிருக்கிறதாம்.

இந்த மாதிரி நஷ்டஈடு 1940-ம் ஆண்டில் ரூ. 57,000 மட்டுமே தரப்பட்டதாம்!

'டெலிவிஷன்' மருத்துவமனை

பிலடெல்பியா, செப். 13—

உலகத்தில் உள்ள மருத்துவர்களை எல்லாம் 'டெலிவிஷன்' மூலம் இணைக்கும் உயரிய மருத்துவமனை ஒன்றை இன்னும் 5 முதல் 18 ஆண்டுகளுக்குள்ளாக அமைக்க முடியும் என்று தான் நம்புவதாக, டாக்டர் ஆல்பிரெட் கோல்டு ஸ்மித் என்ற 'டெலிவிஷன்' ஆலோசகர் தெரிவித்திருக்கிறார்

'மாதிரி கிராமப் பல்கலைக் கழகம்'

புனு, செப். 14—

குஜராத் மாவட்டத்திலுள்ள வல்லப வித்தியா நகரில், 'மாதிரி கிராமப் பல்கலைக் கழகம், நிறுவும் மசோதா ஒன்று சம்பாய் சட்ட சபையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேவநாகிரியில் உள்ள இந்தி, இங்கு போதனு மொழியாக இருக்குமாம்.

ஒருவரையே இருமுறை மணந்துகொண்ட பெண்மணி!

லண்டன், செப். 12—

அபீத் முகம்மது ஷா என்ற 21 வயது பாகிஸ்தானி மாணவர் ஒருவரை கடந்த ஜனவரியில் ஒரு 20 வயது நிரம்பிய ஆங்கிலப் பெண்மணி மணம் செய்துகொண்டார்; அவர்களது மணம், லண்டனில் முஸ்லீம் சட்டப்படி நடைபெற்றது.

இந்தப் பெண்ணின் பெற்றோர் இறந்துவிட்டனர்; எனவே, அப்பெண்மணி, தான் மணம் செய்துகொண்டதை இரகசியமாகவே வைத்திருந்தார்; சீக்கிரமே, தங்களுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்றறிந்த அந்தப் பெண்ணும், கணவனும், அவர்களது வழக்கறிஞர்களும் திருமணம் முஸ்லீம் முறைப்படி நடைபெற்றதினுல், பிறக்கும் குழந்தை, தாயாருக்கு உள்ள 2 இலட்சம் பவுனுக்கு வாரிசாக முடியுமா—என்ற சந்தேகம் எழுந்தது; எனவே, அவர்கள் இருவரும் மீண்டும் சர்க்கார் பதிவுத் திருமண அலுவலகத்தில் இரண்டாம் முறையாகத் திருமணம் செய்து கொண்டனராம்!

'சீட்டோ'வில் சேராதே!

"தென்கிழக்கு ஆசியா ஒப்பந்த நாடுகள் நிறுவனத்தில் சேராமல் பர்மா ஒதுங்கி நிற்கவேண்டும்," என்று, பர்மா பிரதிநிதிகள் சபையில் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேகாத கொழுக்கட்டையை வேக வைக்க...!

இராசேந்திரர் கற்றுத் தரும் தந்திரம்

புதுடில்லி, செப். 14—

“இந்தியைப் பரப்பும்போது, அரசியல் சட்டத்தில் இந்தி பெற்றுள்ள இடம் குறித்து அதிகமாக வற்புறுத்தத் தேவை இல்லை; மொழியின் பெருமையை மட்டும் எடுத்துச் சொல்ல வேண்டும்;

“பத்து ஆண்டுகளில் ஆங்கிலத்திற்குப் பதிலாக அதன் இடத்தில் இந்தியை அமர்த்த வேண்டும்-என்று, அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டிருப்பது உண்மையே; ஆனால், இந்திமொழிக்கென இலக்கியம் (!), சரித்திரம் (!) இவையெல்லாம் இருக்கின்றன; இந்தி மொழி, பரவலாக நாட்டில் பெற்றுள்ள செல்வாக்கை(!)த்தான், இந்தி மொழியின் பெருமைக்குரிய அடிப்படையாகக் கொள்ளவேண்டும்; இந்தியின் இந்த அம்சம் வற்புறுத்தப்படுமானால், இந்தி எல்லாத் துறையிலும் முன்னேற்றம் பெற முடியும்,”

என்று, ஜனாதிபதி இராசேந்திர பிரசாத் வாழ்த்துச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மந்திரி சபைமீது

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

சட்டசபையில் தோல்வி

பாட்னா, செப். 14—

பீகார் மந்திரி சபைமீது ம சோ. கட்சியைச் சேர்ந்த மஹா மாயா பிரசாத் சின்ஹா என்பவர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டு நாள் விவாதத்திற்குப் பின், தோற்றுப் போய் விட்டது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 69 - வாக்குகளும், எதிராக 219 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

பாலாறு தண்ணீர் பிரச்சினை

பேச்சுவார்த்தை துவங்கிற்று

பெங்களூர், செப். 14—

மைசூர் நந்திமலைகளில் உற்பத்தியாகும் ஐந்து நதிகளின் ஒன்றான பாலாறு தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக சென்னை-மைசூர் சர்க்கார்களிடையே ஏற்பட்டுள்ள தகராறுகளைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்காக இன்று ஆரம்ப பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன; மத்திய ஆட்சியினர் விருப்பத்திற்கிணங்கவே இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

ஹிராகுட் அணை விபத்து

மேலும் ஒருவர் பலி

செப். 12-ந் தேதியன்று, ஹிராகுட் அணைப் பகுதியில், படிக்கட்டு முறிந்ததினால் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த 91 பேர்களில், ஒரு பெண்மணி இன்று மாண்டார்: இவருடன் மாண்டவர்களின் எண்ணிக்கை 14 ஆகிறது; முன்பு மாண்ட 13 பேர்களில் 7 பேர் பெண்களாவர்.

இந்த விபத்து பற்றி விசாரணை நடத்துவதற்கு, ஒரு உயர்நீதி மன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் குறிப்புக்கு !

இந்திய இரயில்வேக்களில், தற்போது நாளொன்றுக்கு 4,684 பிரயாணி வண்டிகள் வீதம் விடப்பட்டு வருகிறது; 1955 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து ஜூலை 31-ந் தேதி வரையுள்ள காலத்தில், மொத்தம் 86 வண்டிகள் புதிதாக விடப்பட்டன.

* * *

1955 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து ஜூலை 31-ந் தேதிவரையுள்ள காலத்தில் பாதையைவிட்டு விலகியதின் காரணமாக கூட்ஸ் வண்டிகள் சம்பந்தமாக 475 விபத்துக்களும், கலப்பு வண்டிகள் சம்பந்தமாக 48 விபத்துக்களும் ஏற்பட்டன; அவற்றில்மொத்தம் 737 வாகன்கள் சம்பந்தப்பட்டிருந்தன; இவற்றினால், மொத்தம் சுமார் ரூ 4,90,317 பெறுமானமுள்ள இரயில்வே சொத்து சேதமாகியுள்ளன.

* * *

ஆதாரப்பள்ளி ஆசிரியர்களின் பயிற்சிக்காக 23 மாநிலங்களுக்கு 1954—55-ம் ஆண்டில் மொத்தம் 17,97,558-ம், 1955—56-ம் ஆண்டில் ஆகஸ்டு 31-ந் தேதிவரை மொத்தம் ரூ 7,49,967-ம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கானடாவிலிருந்தும் இரயில்வே எஞ்சின்கள்

இந்தியாவுக்குக் கிடைக்கும்

கொழும்புத் திட்டத்தின் கீழ் 120 பிராட்கேஜ் எஞ்சின்கள், கானடாவிலிருந்து கிடைக்குமென்றும், இவ்வாண்டு முடிவுக்குள் 80 எஞ்சின்கள் வந்துவிடுமென்றும் அதன் மூலம் இரயில்வே போக்குவரத்துக்கள் 20 சதவிகிதம் அதிகரிக்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரியுமா ?

சமுதாய நலத் திட்டத்தில், நிலங்களைத் திருத்திப் பண்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ், இதுவரை சுமார் 5 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டிருக்கிறது

பழ வகைகள், காய்கறிகள் ஆகியவற்றின் சாகுபடி வேலைகளிலும் கவனம் செலுத்தப்பட்டு வந்திருப்பதுடன், மொத்தம் சுமார் 59,000 ஏகரா நிலத்தில் பழவகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள் பருவ மழையையே முற்றிலும் நம்பிக்கொண்டிராமல் செய்யும்பொருட்டு சமுதாய நலத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறு பாசன வேலைகளும் நல்ல முன்னேற்றமடைந்திருக்கின்றன. இவற்றின் மூலம் சுமார் 10 இலட்சம் ஏக்கரா நிலத்துக்கு இப்போது பாசன வசதி கிடைத்து வருகிறது.

ஜெர்மன் யுத்தக் கைதிகள்

ரஷ்யாவிலிருந்து விடுவிக்கப் படுகின்றனர்

பான், செப். 14—

“சோவியத் ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டுள்ள ஜெர்மன் யுத்தக் கைதிகளை படிப்படியாக விடுவிக்கும் வேலை துவங்கிவிட்டது,”

என்று, மேற்கு ஜெர்மன் அதிபர் அடினார் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு இப்போதுதான் திரும்பியுள்ள அவர், ‘நீங்கள் பான் நகர் திரும்புமுன் ஜெர்மன் கைதிகள் பலர் விடுவிக்கப்பட்டுவிடுவர்,’ என்று சோவியத் பிரதமர் புல்கானின் தெரிவித்ததாக விமான நிலையத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

தங்கள் பேச்சுவார்த்தைகள் மிகக் கடினமான ஒன்றாக இருந்தது என்றும், சோவியத் தலைவர்களோ, தாங்களோ ஒளிவு மறைவு எதுவும் வைத்துக் கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பலே பேர்வழிகள்

ஜபல்பூர், செப். 14—

இங்குள்ள மத்திய சிறையில் நீண்டகால சிறைத் தண்டனை அனுபவித்து வந்த ஒரு கைதி, தான் சிறைக் கதவின் கம்பிகளைப் பெயர்த்துத் தப்புவதற்கு முயற்சிக்கும்போது, சிறை ‘வார்டர்’ ஒருவர் பார்த்துவிட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இறந்துபட்டதாகத் தெரிகிறது.

சீதாராம் என்ற அந்தக் கைதி 15 ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்; இதற்கு முன் அவர், போலீசாரிடமிருந்தோ அல்லது சிறையிலிருந்தோ ஐந்து முறைகள் தப்பி ஓடியவர் என்றும் கூறப்படுகிறது.

கடந்த முறை அவர், நரசிங்கப்பூர் சிறையிலிருந்து தப்பிவிட்டார்; அவரை மீண்டும் சிறைப்படுத்த போலீசார் இரண்டாண்டுக் காலம் கஷ்டப்பட்டிருக்கின்றனர்.

ஹார்பான்ஸ் என்ற மற்றொரு கைதி, மத்திய சிறையிலிருந்து கடந்த ஞாயிறன்று இரவு தப்ப முயற்சித்தாராம்; ஆனால் அவர், சிறையில் உள்ள களஞ்சியம் ஒன்றில் மறைந்து கொண்டிருந்த போது பிடிக்கப்பட்டுவிட்டாராம்.

ஹார்பான்ஸ் கூட, இதற்குமுன் மூன்று முறை சிறையிலிருந்து தப்பியவர்தான் என்றும் கூறப்படுகிறது.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—27/55

தி. மு. கழக ஆண்டு விழாவும்—நாட்டுப் பிரிவினை வாரமும்

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங்கொண்டு, ஆறு ஆண்டுகளைக் கடந்து, ஏழாவது ஆண்டில் அடி எடுத்துவைக்கும் பெருமைகொள் விழா 17—9—55-ஆம் நாளன்று நடைபெறவிருக்கிறது.

17—9—55-ஆம் நாளிலிருந்து 23—9—55-ஆம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகக்கொண்டு, தி. மு. கழக ஆண்டு விழாவை மிகச் சீரிய முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத்திற்குச் சார்புடைய அமைப்புகளும் கொண்டாடுவனவாக!

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக்கூறியும், திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டு—தட்டிகள் எழுதி வைத்து—ஊர்வலங்கள் நடத்தி—பொதுக்கூட்டங்கள் கூட்டிக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

இயன்றால் கொள்கை விளக்க இசையரங்குகளும்—நாடகங்களும் இலவசமாக நடத்திக்காட்டுவார்களாக!

‘அறிவகம்’, சென்னை-13
27—8—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

****

கழகச் செய்திகள்

சங்கரநயினார்கோவில் நகர தி. மு. கழகம்

5—9—55ல், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில், செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, 16—8—55ல் அண்ணா பேசிய பொதுக்கூட்ட வரவு - செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

பம்பாய்—தாராவி தி. மு. கழகம்

7—9—55 இரவு 7 மணியளவில் கழகப் பணிமனையில், தோழர் மா. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், கடந்த கூட்ட நிகழ்ச்சிகள், கடிதப் போக்கு - வரத்துக்கள் படித்துக் காண்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டும், பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழு பிரதிநிதியாகத் தோழர் மா. இரா. குறள்தாசன் தேர்ந்தெடுக்கப்பட்டும், படிப்பக பொறுப்பாளராக தோழர் எஸ். தங்கையா தேர்ந்தெடுக்கப்பட்டதை அங்கீகரித்தும், ‘முயற்சி’யில் வெளிவந்திருக்கும் அறிவு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, இரண்டு பரிசுகள் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும், 18—9—55 மாலை 6 மணியளவில் குடியரசு நிலையத்தில், திராவிட நாடு பிரிவினை நாள் விழாவைக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. பின்னர், கோவாவில் போர்ச்சுகீசிய சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், மற்றும், இரு அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருவில்லிப்புத்தூர் தெற்கு வட்ட தி. மு. கழகக் குழு

7—9—55 மாலை 4½ மணிக்கு, தளவாய்புரம் தி. மு. கழகக் கட்டிடத்தில் நல்லமங்கலம், தளவாய்புரம், கிருட்டிணபுரம், முத்துச்சாமியாபுரம், முகவூர், சேத்தூர் ஆகிய கழகங்களிலிருந்து 11 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, தோழர் பு. கா. ச. காளிமுத்து அவர்களைச் செயலாளராகக் கொண்ட திருவில்லிப்புத்தூர் தெற்கு வட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர், 14—9—55-ல், வட்டக் குழுவின் சார்பில் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து தி. மு. கழக ஏழாவது ஆண்டு விழா கொண்டாடுவதெனவும், மற்றும், சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகம்

8—9—55ல் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் 7-வது ஆண்டு விழாவை பொதுக் கூட்டம் நடத்திக் கொண்டாடுவதென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

11,000 தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவுற்றது

இராபர்ட்சன்பேட்டை, செப். 14—

கோலார் தங்கவயல் தொழிலாளர்கள் 11,000 பேர் கடந்த கிழமையில் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் இன்றுடன் முடிவுற்றது.

தங்களின் கோரிக்கைகள் பற்றி நிர்வாகிகளுக்கும்—தொழிற் சங்க பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் மேற்கொள்ளப்பட்ட சுமுகமான முடிவுகள், வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்படுவதற்குத் துணை நின்றிருக்கின்றன.

இன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

கம்பம் (மதுரை மாவட்டம்) தி. மு. கழகம்

9—9—55 இரவு 10 மணிக்கு, காந்திமதி நிலயத்தில் தோழர் பாலகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் கோவா கண்டனம், அனுதாபத் தீர்மானங்களும், மற்றும், மேற்படியூரில் பஸ் பிரயாணிகளுக்கென பஸ் நிலையம் ஒன்றை அமைத்து வசதி செய்து தருமாறு பஞ்சாயத்துப் போர்டாரைக் கேட்டுக்கொண்டும், 18—9—55-ல், திராவிட நாடு பிரிவினை நாள், தி. மு கழக 7-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் கிளைக் கழக வரவு - செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

கொப்பம்பட்டியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

10—9—55 மாலை 6½ மணிக்கு, கொப்பம்பட்டி தேர் நிறுத்தத் திடலில், தோழர் டி. கே. பி. சாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், மருதமுத்து, சி. மாணிக்கம் ஆகியோர் ‘நமது சமுதாயமும் - இன்றைய அரசியலும்’ என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர்.

பாலூர்சத்திரம் தி. மு. க.

11—9—55-ல், தோழர் வி பி. தங்கம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கடந்த மாத வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொண்டும், மாவட்டப் பிரதிநிதி தன் உடல் நலக் குறைவின் காரணமாய்க் கொடுத்த விலகல் கடிதத்தைப் பரிசீலித்து, மாநில மாநாடு முடியும்வரை தொடர்ந்து பதவியிலிருக்கும்படி கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கொமாரசாமிபட்டி தி. மு. கழகம்

11—9—55 காலை 10 மணிக்கு, தோழர் சி. இராசன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், 18—9—55-ல், திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடுவது என்றும், அன்று, நகரின் சில பகுதிகளில் கொடியேற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

13-9-55 ல் தோழர் கு. பிச்சை தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர் க கதிர்வேல் திடீர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும், திராவிட நாடு பிரிவினை நாள் விழாவன்று ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திருமணம்

14—9—55 காலை 9 மணிக்கு, புதுவைக்கடுத்த பூரணாங்குப்பத்தில், தோழர் ப. கனகலிங்கம் தலைமையில் தோழர் செ. அழகப்பன் என்ற அரங்கசாமி—தோழியர் ஞானசவுந்தரி திருமணம் நடைபெற்றது. சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் பற்றி தலைவர் விளக்கினார். தோழர்கள் ஆ. முனுசாமி, ச. சிவப்பிரகாசம், அ பொன்னம்பலனார் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமண நினைவாக, ‘நம் நாடு’ இதழுக்கு ரூ 3-ம், புதுவை தி. மு. கழகத்திற்கு ரூ. 2-ம் நன்கொடை தரப்பட்டது. ‘நம் நாடு’க்கு அளிக்கப்பட்ட நன்கொடை வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்,

நாடெங்கும் பிரிவினை முழக்கம்

★

சென்னை

★

8-வது வட்டம்

பெத்துநாய்க்கன்பேட்டை, காசி விஸ்வநாதர் கோவில் திடலில் 19—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: சி. எஸ். கணேசன்

பேசுவோர்:
என். வி. நடராசன்
சி. பி. சிற்றரசு
சி. ஆர். பாலசுந்தரம்

* * *

18-வது வட்டம்

18—9—55 காலை 9 மணிக்கு, சென்னை-புளியந்தோப்பு, பார்த்தசாரதி நாயுடு தெருவில், தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெறும். தோழர் எஸ். சிவானந்தம் கொடியேற்றி வைப்பார். விழாவில், தோழர் ஈ. வெ. கி. சம்பத், 11—9—55 அன்று, சென்னை-கோமளீஸ்வரன் பேட்டையில் ஆற்றிய சொற்பொழிவு ஒலிபரப்பப்படும்.

* * *

42-வது வட்டம்

18—9—55 காலை 9 மணிக்கு. கழகப் பணிமனையில் (4, நமச்சிவாய முதலி தெரு, திருவல்லிக்கேணி), தோழர் எல். கோபால் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை ஆர்.எஸ்.பாண்டியன், இளம்பரிதி, அன்பரசு, ஏ. கே. நடராசன், பூ. அரங்கசாமி, மற்றும் பலர் பேசுவர்.

* * *

46-வது வட்டம்

17—9—55 மாலை 6 மணிக்கு; கழகப் பணிமனைமுன் 46-வது வட்ட கிளைக் கழகத் தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் நாவுக்கரசு, இளம்பரிதி, அ. செல்வராசன், இரா. அகமழகன் ஆகியோர் பேசுவர்.

* * *

வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

18—9—55 காலை 10 மணிக்கு, மேற்படி படிப்பகப் பணிமனையில், தோழர் திருமணி தலைமையில் நடைபெறும். படிப்பக உறுப்பினர்கள் பலர் பேசுவர்.

★

மீஞ்சூர்

18-9-55 பிற்பகல் 2 மணிக்கு தோழர் மு. கேசவன் தலைமையில் ஊர்வலமும், மாலை 5 மணிக்கு தோழர் என். திராவிடச்செல்வன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர் நாதம் டி. ராமசாமி பேசுவார்.

★

ஆவடி

சாந்தி சதுக்கத்தில்
17—9—55 மாலை 5½ மணிக்கு
தலைவர்: மா. அமலன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்
18—9—55 மாலை 7 மணிக்கு
பேசுபவர்:
என். வி. நடராசன்
(மாலை 5 மணிக்கு வ. உ. சி. திடலிலிருந்து ஊர்வலம் நடைபெறும்.)

★

அரியநகர் (புதுவை)

18—9—55 காலை 9 மணிக்கு சைக்கிள் ஊர்வலமும், 10 மணிக்கு முருகப்பாக்கத்தில் கொடியேற்று விழாவும், 12 மணிக்கு கழக இல்லத்தில் ஏழைகட்குச் சமபந்தி வார்த்தலும், மாலை 3 மணிக்கு சொற்பொழிவும், 4 மணிக்கு தேநீர் விருந்தும், தோழர் டி. லோகநாதன் இசையரங்கும் நடைபெறும்.

காங்கயம்

மதார்சா சாயபு பேட்டையில்
19—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். வேலுசாமி
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

நத்தம்

கடை வீதியில்
18—9—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. மணியன்
பேசுபவர்:
அறிவுடைநம்பி

★

புவனகிரி

வெள்ளாற்று மணல் பரப்பில்
19—9—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
கண்ணதாசன்

★

கோல்லைக்கோம்பை

18—9—55 மாலை 3 மணிக்கு
தலைவர்: கு. இராமக்குட்டி
பேசுவோர்:
சிற்றுளி சுப்பிரமணியம்
மாதன்
சி. இல. சுந்தரேசுவரன்

★

சத்தியமங்கலம்

அஷ்டலக்ஷ்மி மண்டப மைதானத்தில்
19—9—55 மாலை 7 மணிக்கு
தலைவர்: கே. சிவக்கொழுந்து
பேசுவோர்:
செழியன்
வேலவன்

★

பம்பாய்—அந்தேரி

19—9—55 காலை 9 மணிக்கு, பம்பாய்-அந்தேரி, கோல்டுங்கரி பணிமனையில் நடைபெறும்.

சிறப்புச் சொற்பொழிவு

★

பெங்களூர் தி. மு. கழக நூல் நிலைய வளர்ச்சி நிதிக்காக
பெங்களூர் சர். புட்டண்ணச் செட்டி டவுன் ஹாலில்
18—9—55 மாலை 3½ மணிக்கு
தலைவர்: எஸ். வி. பதி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
டி. கே. சீனிவாசன்
ஏ. டி. பிரான்சிஸ்
இன்னிசை: நாகூர் அனிபா

பொன்னேரி வட்ட தி. மு. க. செயலாளர்கட்கு

18—9—55 பகல் 1½ மணிக்கு, ஆரணி தி. மு. கழகக் கட்டிடத்தில், வட்டக் குழு கூடி சில முக்கிய விஷயங்கள் பேசப்படும்.

மாதவரம் பிர்க்கா தி.மு.கழக பிரச்சாரக் குழு, செயற் குழு உறுப்பினர்கட்கு

18—9—55 காலை 8½ மணிக்கு, மாதவரம் தி. மு. கழகத்தில், மாதவரம் பிர்க்கா தி. மு. கழக பிரச்சாரக் குழு, செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

சி. எம். எஸ். நினைவு மன்றம் திறப்பு விழா

18—9—55 காலை 10 மணிக்கு; திருப்பத்தூர் (வ. ஆ) மீனாட்சி டாக்கீசில், திரு. வி. எஸ். வீரபத்திரன் தலைமையில்மேற்படி மன்றத் திறப்பு விழா நடைபெறும் தோழர் க. செஞ்சோழன் விழா வைத் துவக்கி வைப்பார். தோழர்கள் இ. எஸ். இராசவனூர், கே தாசரதி, எம். இருசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் சி. பி. சிற்றரசு, திரு சி. எம் சுப்பிரமணியக் அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுவார்.

ஆறு போலீஸ் அதிகாரிகள் கைது

காவலிலிருந்தவரை சித்திரவதை செய்தனராம்!

நாகபுரி, செப். 15—

போலீசாரால் சந்தேகிக்கப்பட்ட ஒருவர், கடந்த 1954 அக். திங்களில் ஜபல்பூர் மாவட்டத்தில் உள்ள ரிதி போலீஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்; ஆனால், ஒரு நாள் அவர் பிணமாகக் கிடந்தார்; பிரேத பரிசோதனையின் போது, இறந்துபட்டவரின் உடலில் சுமார் 59 காயங்கள் இருந்ததாகவும், சித்திரவதை செய்யப்பட்டதின் விளைவாகவே அவர் இறந்துபட்டார் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர், நீதிமன்றத் துப்பறியும் இலாகா விசாரணை நடத்தப்பட்டபோதிலும் முடிவு எதும் காணப்படவில்லை

இறுதியாக சர்க்கார், 'புகார்கள் போர்டி'ன் விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர்; அவர்கள் விசாரணை செய்து, ரிதி போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு வட்டார அதிகாரி, உதவி போலீஸ் அதிகாரி ஆகியோர் உள்ளிட்ட ஆறு போலீஸ் அதிகாரிகளைக் கைது செய்திருக்கின்றனர்.

அவர்கள் மீது, சித்திரவதை செய்து, ஒருவரைக் கொலை செய்த குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்படுவதாக அறிவிக்கிறது

கொடி ஏறியது!

கொடித் தகராறு சம்பந்தமாக ஆப்கன்—பாகிஸ்தான் சர்க்கார்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகள், சமரசமாகத் தீர்த்துவைக்கப் பட்டுவிட்டது.

அதைத் தொடர்ந்து, பெஷாவரிலும், ஆப்கனிலும் உள்ள இரு நாட்டுத் தூதுவராலயங்களிலும் அந்தந்த நாட்டுக் கொடிகள் ஏற்றப்பட்டபோது, இராணுவத்தினர் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர்; ஆப்கன்—பாகிஸ்தான் கீதங்கள் இசைக்கப்பட்டன.

சென்னையிலிருந்து

ஒரிசாவுக்கு உணவு இரயில்கள்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரிசா பகுதிகளுக்கு அவசிய மாகத் தேவையாக உள்ள உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு நாள்தோறும் சென்னை, கல்கத்தா ஆகிய மாநிலங்களிலிருந்து விசேட இரயில்கள் ஒரிசாவுக்குச் செல்லுகின்றன; ஏற்கனவே 1,000 டன் கோதுமையை இந்திய சர்க்கார் அனுப்பியிருக்கிறது.

புதுவை நிர்வாகம்

புதுடில்லி, செப். 15—

புதுவை நிர்வாகத்தை, இந்தியாவின் இதர பாகங்களிலுள்ள நிர்வாகத்திற்குச் சமமாகச் செய்வதற்குச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும், இந்தியா—பிரான்ஸ் ஒப்பந்தத்தின் எல்லைக்குட்பட்டு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது சம்பந்தமான கண்டிப்பான உத்திரவுகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் மத்திய வெளிநாட்டு இலாகா துணை மந்திரி மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

“சட்டபூர்வமான அதிகார மாற்றம் ஏற்படும் வரையில், அங்கு சில மாறுதல்களைச் செய்யமுடியாத நிலைமையில் இந்திய சர்க்கார் உள்ளனர்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருக்குறள் வகுப்பு

தாய்மார் கழகச் சார்பில் 17—9—55 சனி பிற்பகல் 2-30 மணிக்கு மேல் சென்னை முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை சிவமுத்து அவர்கள், 'பெரியாரைத் துணைக்கோடல்,' 'சிற்றினம் சேராமை' என்பது குறித்து சொற்பொழிவாற்றுவார்.

கல்லூரிகளில் ஆண்டுத் தேர்வு

இப்போதுள்ள முறையே நீடிக்க வேண்டும் என கோரிக்கை

சென்னை, செப். 15—

'பள்ளி ஆண்டு, டிசம்பர் திங்களுடன் முடிய வேண்டும்; இப்போதுபோல் ஏப்ரல் திங்களில் பரீட்சைகள் நடத்தக் கூடாது' என்று சர்க்கார் தெரிவித்த கொள்கைக்கு சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரித் தலையாயர்கள் ஆதரவு காட்டவில்லை என்று தெரிகிறது.

'இப்போதுள்ளது போலவே, பள்ளிப் பரீட்சைகள் நடத்துவதும், விடுமுறை அளிப்பதும் இருக்க வேண்டும்' என்று அவர்கள் கருதுகின்றனர்.

இந்தக் கருத்தினை, சர்க்காருக்கு, சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்' தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

கல்லூரிப் படிப்பு முறையில் மாறுதல்

பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றதும், நேரடியாக மூன்றாண்டுகள் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுமுன் ஓராண்டு பூர்வாங்கப் படிப்புக்கான பொதுத் திட்டம் ஒன்றை சென்னை பல்கலைக் கழக 'அகாடமி' சபை அங்கீகரித்திருக்கிறது.

இந்தப் புதிய திட்டம், வரும் 1956-57-ம் ஆண்டிலிருந்து துவங்கும்; இடைநிலைக் கல்விக் குழு 'பல்கலைக் கழகங்களின் கல்வி முறையில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்கள்,' எனச் செய்திருந்த சிபாரிசுகளில் இந்தத் திட்டமும் ஒன்றாகும்.

பயங்கரக் கதைப் புத்தகங்களுக்கு தடை!

மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, செப். 15—

படங்கள் மூலமோ, படங்களின்றியோ, அல்லது முழுமையிலும் படங்களாகவோ கொண்டு கொள்ளை, கொலை, களவு போன்ற குற்றங்களையும், பலாத்காரங்களையும் தூண்டும் புத்தகங்கள், சஞ்சிகைகள், சிறு வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றைத் தீங்கு விளைவிக்கும் பிரசுரங்களாகக் கருதி, அவற்றைத் தடுப்பதற்கான மசோதா ஒன்று மக்கள் சபையில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

'இம்மாதிரியான பிரசுரங்கள் இந்தியாவில் ஏராளமாக இருப்பதால், குற்றங்கள் செய்யும் மனோ பாவத்தை சிறுவர்களிடை அவை ஏற்படுத்திவிடுகின்றன.' என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவரேனும் இம்மாதிரியான பிரசுரங்களை விற்றாலும், வாடகைக்குக் கொடுத்தாலும், விநியோகம் செய்தாலும், பகிரங்கமாகக் காட்டினாலும், தன்னிடம் வைத்துக் கொண்டிருந்தாலும், அச்சிட்டாலும், விளம்பரம் செய்தாலும் அவர்களுக்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனை, அல்லது அபராதம், அல்லது அபராதமும் சிறைத் தண்டனையும் சேர்த்து விதிக்கப்படும்.

புரட்சித் தலைவருக்கு

2 இலட்சம் மக்கள் வரவேற்பு

காட்மண்டு, செப் 14—

ஒரு வீரனுக்கு அளிக்கவேண்டிய வணக்கத்தைப் போன்று, நேப்பாள மன்னரின் மன்னிப்பைப் பெற்று நாடு திரும்பிய டாக்டர் கே. ஐ சிங்குக்கு, காட்மண்டு நகர மக்கள் வரவேற்பளித்துள்ளனர்.

ஊர்வலமாக அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது, சுமார் 2 லட்சம் மக்கள் ஒன்று திரண்டு அவருக்கு ஆரவாரத்துடன் வரவேற்பு தந்தனராம்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் திருப்பூர் வருகை

★

18—9—55 அன்று, தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவும், மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாவும், பொதுச்செயலாளர் வரவேற்பும் நடைபெறும்.

காலை 10 மணிக்கு, திருப்பூர் புஷ்பா தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் கி. மனோகரன் ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை, நொய்யல்நதியில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

மணமேடு வருகை

20—9—55 மாலை 5 மணிக்கு, மணமேடு, பாவோடி மைதானத்தில், தோழர் எஸ். ஆர். நடராசன் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

மதுரை திருவள்ளுவர் கழகம் 14-வது ஆண்டு நிறைவு விழா

★

இத்திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்களிலும் தொடர்ந்து மேற்படி கழகத்தின் பதினான்காவது ஆண்டு நிறைவு விழா நடைபெறும்

திருவாளர்கள் அமைச்சர் சண்முக இராசேசுவர நாகநாத சேதுபதி, ஆர். குஞ்சிதபாதம், வி. இரத்தினம், ச. வெள்ளைச்சாமி ஆகியோர் முறையே நான்கு நாட்களிலும் தலைமை வகிப்பர். பேரறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர். திரு. பி. டி. இராசன் அவர்கள் விழாவில் முக்கியபங்கேற்பார்.

திரு. வி. க., மறைமலையடிகளார், பாரதியார் நினைவுநாள் விழா

★

சென்னை மாணவர் மன்றம், தமிழாசிரியர் கழகம், பெத்துநாய்க்கன் பேட்டைத் தாய்மார் கழகம், இவற்றின் சார்பில் திரு வி. க., மறைமலையடிகள், பாரதியார் நினைவு நாள் விழா 18—9—55 ஞாயிறு மாலை 4 மணிக்கு மேல் சென்னை அம்மன் கோயில் தெரு டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும். திரு. பரலி சு. நெல்லையப்பர் தலைமை வகிப்பார். திருவாளர்கள் மயிலை சிவமுத்து, எஸ். சச்சிதானம், இராசாக் கண்ணனூர், பாலூர் து. கண்ணப்பர், ந. சஞ்சீவி, பகீரதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை — புது வண்ணை வள்ளுவர் இளைஞர் மன்ற உறுப்பினர்கட்கு

18—9—55 இரவு 8 மணி அளவில், மன்றக் கட்டிடத்தில் தோழர் வி. எஸ். வாசன் தலைமையில் மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

18—9—55 காலை 8 மணிக்கு சென்னை 31-வது வட்டம் அழகிரி நினைவு மன்றப் பணி மனையில், தோழர் து. தீனன் தலைமையில் 'குறள்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.